**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**O.S. No.406/2015**

**நாள்.11.03.2026**

**வா.சா. 2- வைரவன்**

**1மற்றும் 2 வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. என்னை பொது அதிகார முகவர் அந்தோணி சாட்சி சொல்ல அழைத்து வந்தார் என்றால் சரிதான். நான் வாதி சாந்தம்மாளின் உடன்பிறந்த சகோதரியை திருமணம் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் கே.புதூர் கிராமத்தில் நடுத்தெருவில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். வழக்குச் சொத்து கே.புதூர் கிராமத்தில் கிழக்குத் தெருவில் உள்ளது என்றால் சரிதான். எனக்கு கே.புதூர் கிராமத்தில் கிழக்குத் தெருவில் குடியிருப்பு கிடையாது என்றால் சரிதான். வாதி சாந்தம்மாளின் வீட்டுக்கு மேற்கில் வாசல் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வாசலுக்கு மேல்பக்கம் தென்வடலாக நடைபாதை உண்டு என்றால் சரிதான். உபயவாதிகள் பயன்படுத்தி வருவதாக நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ள பாதையின் சர்வே எண், விஸ்தீரணம், நீள அகலம் என்ன என்றால் தெரியாது. வாதி சாந்தம்மாள் இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் தெரியாது நடைபாதைக்காக வழக்குப் போட்டுள்ளார் என்பது மட்டும் தெரியும். வாதி சாந்தம்மாள் எனது உறவினர் என்பதால் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**1மற்றும் 2 வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.03.11 17:07:21 +0530